


dinakani2023@gmail.com

நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 290 | 4 Pages | 17.5.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 290 | 4 பக்கங்கள் | 17.5.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்**

**விளக்கம்:**
**ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால் அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவனாவான்.**

# ஆளுநர் வழக்கில் குடியரசுத் தலைவரின் கேள்விகள் தொடர்பாக ஊட்டியில் முதல்வர் ஸ்டாலின் விளக்கம்

சென்னை மே.17

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி உச்ச நீதிமன்றத்திடம் ஆளுநர் தொடர்பான வழக்கின் தீர்ப்பு குறித்து விளக்கம் கேட்டு எழுப்பிய 14 கேள்விகளை பற்றி ஊட்டியில் இன்று முதல்வர்ஸ்டாலினிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். இதற்கு பதில் அளித்த முதல்வர் ஸ்டாலின் மற்ற மாநில முதல்வர்களுடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி மசோதாவை நிலுவையில் வைத்து தாமதம் செய்வதாக குற்றம்சாட்டி தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் தீர்ப்பளித்தது. உச்ச நீதிமன்றம் அந்த தீர்ப்பில் தமிழக அரசின் சட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் தராததை கண்டித்ததுடன், அந்த 10 மசோதாக்களுக்கும் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்ச நீதிமன்றமே ஒப்புதலும் அளித்தது. அதேபோல் வரலாற்றில் முதல்முறையாக குடியரசுத் தலைவர், ஆளுநர் ஆகியோர் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான காலக்கெடுவையும் விதித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பு தொடர்பாக அவசர சட்டம் பிறப்பிக்கலாமா அல்லது மறு ஆய்வு மனு தாக்கல் செய்யலாமா என்று மத்திய அரசு ஆலோசனை நடத்தி வருகிறது. இந்த சூழலில் தமிழக ஆளுநர் தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, நேற்று 14 கேள்விகளை உச்ச நீதிமன்றத்துக்கு எழுப்பினார்.

ஒரு மசோதா, ஆளுநரின் ஒப்புதலுக்கு வரும்போது அரசியல் சாசனத்தின் 200வது பிரிவின்கீழ், அவருக்கு இருக்கும் சட்டரீதியான வாய்ப்புகள் என்ன, அப்படி ஒரு மசோதா அனுப்பப்பட்டு, தனக்குரிய அனைத்து வாய்ப்புகளையும் கவர்னர் பயன்படுத்தும்போது, அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனைக்கு கவர்னர் கட்டுப்பட்டவரா? அரசியல் சாசனத்தின் 200வது பிரிவின் கீழ், ஆளுநரின் தனியுரிமை என்பது கோர்ட்டு ஆய்வுக்கு உட்பட்டதா? அரசியல் சாசனத்தின் 200வது பிரிவின் கீழ் ஆளுநரின் செயல்பாடுகள் தொடர்பாக கோர்ட்டு விசாரிக்க, அரசியல் சாசனத்தின் 361வது பிரிவு தடையாக உள்ளதா? என மொத்தம் 14 கேள்விகளை ஆளுநர் ரவி எழுப்பினார்.

இந்நிலையில் குடியரசுத் தலைவர் மூலம் கேள்வி எழுப்பி உள்ளதாக மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்தார். இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறுகையில், "தமிழ்நாடு ஆளுநர் தொடர்பான வழக்கிலும், அது போன்ற பிற நிகழ்வுகளிலும் உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்து முடித்து வைத்துள்ள விவகாரத்தில், அந்த அரசியலமைப்பு நிலைப்பாட்டை நிலைகுலைக்கும் விதத்தில் குடியரசுத் தலைவர் மூலமாக மத்திய அரசு உச்சநீதிமன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.



இதன்மூலமாக, தமிழ்நாடு ஆளுநர் பாஜகவின் தூண்டுதலின் பேரில்தான் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை சிறுமைப்படுத்தும் வகையில் நடந்து கொண்டார் என்பது அம்பலமாகி உள்ளது. இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை மத்திய அரசின் முகவர்களான ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் வைத்து அவற்றை பலவீனப்படுத்தும் முயற்சியே அன்றி வேறில்லை. மேலும், இது சட்டத்தின் மாட்சிமைக்கும், அரசியலமைப்புச் சட்டத்தைப் பொருள் கொள்வதில் இறுதித் தீர்ப்பளிக்கும் உரிமைகொண்ட சுப்ரீம் கோர்ட்டுக்கும் நேரடியாகச் சவால் விடுகிறது.

கவர்னர்கள் முடிவெடுக்க காலநிர்ணயம் செய்யப்படுவதில் எதற்கு எதிர்ப்பு இருக்க வேண்டும்? சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் காலவரையற்ற தாமதத்தை அனுமதிப்பதின் வழியாக, கவர்னர்களின் முட்டுக்கட்டையை பாஜக சட்டப்பூர்வமாக்க முயல்கிறதா? பாஜக அல்லாத கட்சிகள் ஆளும் மாநில சட்ட மன்றங்களை மத்திய அரசு முடக்க எண்ணுகிறதா?

மிக முக்கியமான கட்டத்தில் நமது நாடு நிற்கிறது. சுப்ரீம் கோர்ட்டின் விளக்கம் கோரி எழுப்பப்பட்டுள்ள வினாக்கள் அரசியலமைப்பு சட்டம் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே அதிகாரங்களை பகிர்ந்தளித்துள்ளதன் அடிப்படையையே சீர்குலைக்கவும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில சட்ட மன்றங்களைத் திறனற்றதாக்கவும் நினைக்கும் மத்திய பாஜக அரசின் தீய எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. ஆகையால், மாநில சுயாட்சிக்கே இது உடனடி ஆபத்தை உருவாக்கி உள்ளது.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில், பா.ஜனதா அல்லாத அனைத்து மாநில அரசுகள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் அரசியலமைப்பு சட்டத்தைப் பாதுகாப்பதற்கான சட்டப் போராட்டத்தில் இணையுமாறு வலியுறுத்துகிறேன். நம் ஒட்டுமொத்த ஆற்றலையும் ஒருங்கிணைத்து இப்போராட்டத்தில் ஈடுபடுவோம். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்" இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருந்தார்.

இந்நிலையில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி உச்ச நீதிமன்றத்திடம் ஆளுநர் தொடர்பான வழக்கின் தீர்ப்பு குறித்து விளக்கம் கேட்டு எழுப்பிய 14 கேள்விகளை பற்றி ஊட்டியில் இன்று முதல்வர் ஸ்டாலினிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்கு பதில் அளித்த முதல்வர் ஸ்டாலின் பிற மாநில முதல்வர்கள், கட்சி தலைவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். 2026 தேர்தல் மட்டுமின்றி 2031, 2036 தேர்தல்களிலும் திமுகதான் வெற்றி பெறும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

## டிரம்ப் பற்றிய பதிவை நீக்கிய கங்கனா ரனாவத்



மும்பை, மே.17

டிரம்ப் பற்றி சமூக வலைதளத்தில் பகிர்ந்த பதிவை நீக்கிவிட்டதாக கங்கனா ரனாவத் தெரிவித்திருக்கிறார்.

நடிகையும் அரசியல்வாதியுமானவர் கங்கனா ரனாவத். இவர் சமீபத்தில், இந்தியாவில் ஆப்பிள் நிறுவனம் அதன் உற்பத்தியை அதிகரிக்க கூடாது என்ற டிரம்ப்பின் கருத்தை விமர்சித்து டுவீட் செய்திருந்தார். இந்நிலையில், பாஜக தலைவர் ஜே.பி.நட்டாவின் அறிவுறுத்தலின்படி அந்த பதிவை கங்கனா நீக்கி இருக்கிறார்.

இது தொடர்பாக அவர் பகிர்ந்த பதிவில்,

"இந்தியாவில் ஆப்பிள் நிறுவனம் அதிகளவில் உற்பத்தியில் ஈடுபட வேண்டாம் என டிரம்ப் சொன்னது தொடர்பாக நான் பதிவு செய்த டுவீட்டை நீக்குமாறு ஜே.பி.நட்டா என்னை தொடர்பு கொண்டு கூறினார். அந்த பதிவு என்னுடைய தனிப்பட்ட கருத்து என தெரிவித்துக் கொள்கிறேன். அந்த பதிவை இன்ஸ்டாவில் இருந்து நீக்கி விட்டேன்" என்று தெரிவித்திருக்கிறார்.

## ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை மந்திரியுடன் ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை



டெல்லி, மே.17

காஷ்மீரின் பஹல்காம் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தானில் ஆட்சியில் உள்ள தலிபான்கள் அரசு கண்டனம் தெரிவித்திருந்தது. இந்நிலையில், ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை மந்திரி அமீர்கான் முட்டகை இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, பஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த ஆப்கானிஸ்தான் அரசுக்கு அவர் நன்றி தெரிவித்தார். ஆப்கானிஸ்தானில் நடைபெறும் தலிபான்கள் அரசை இந்திய அரசு இதுவரை அங்கீகரிக்கவில்லை. தற்போது அந்நாட்டு வெளியுறவுத்துறை மந்திரியுடன் இந்திய வெளியுறவுத்துறை மந்திரி தொலைபேசி மூலம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள நிகழ்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## எதிர்பார்த்ததைவிட குறைவான மதிப்பெண் பெற்றதால் 15வது மாடியில் இருந்து குதித்து மாணவன் தற்கொலை

குருகிராம், மே.17

அரியானா மாநிலம் குருகிராம் நகருக்கு அருகே டாடா பிரிமந்தி சொசைட்டி அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று முன்தினம் ஒரு சிறுவன் மாடியில் இருந்து குதித்துவிட்டான். 17 வயதான அவன் அங்குள்ள ஒரு தனியார் பள்ளியில் 12 ம் வகுப்பு படித்து வந்தான். சமீபத்தில் வெளியான தேர்வு முடிவில் மாணவன் 75 சதவீத மதிப்பெண்கள் பெற்று உள்ளார்.

தான் எதிர்பார்த்ததைவிட குறைவான மதிப்பெண் பெற்றதால் மன உளைச்சலில் இருந்த அவர், தான் வசித்த அடுக்குமாடி குடியிருப்பின் 15வது மாடியில் இருந்து குதித்துவிட்டார். உடனடியாக குடியிருப்புவாசிகள் மாணவனை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர். இறந்த மாணவனின் பெயர் சவுர்யா சாண்டில்யா என்று தெரியவந்தது.

## ஜார்க்கண்ட்: மின்னல் தாக்கி பாதுகாப்புப்படை அதிகாரி பலி

ராஞ்சி, மே.17

ஜார்க்கண்ட் மாநிலம் மேற்கு சிங்பம் மாவட்டம் கிரிபுரா கிராமத்தில் நேற்று இரவு 11 மணியளவில் சிஆர்பிஎப் பாதுகாப்புப்படையினர் நக்சலைட்டுகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதில், பிரபோசிங் என்ற அதிகாரியும் ஈடுபட்டார். வனப்பகுதியில் தேடுதல் பணியில் ஈடுபட்டபோது பிரபோ சிங் மீது திடீரென மின்னல் தாக்கியது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொரு அதிகாரியான மண்டல் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தசம்பவம் தொடர்பாகஅதிகாரிகள்விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பெண் ராணுவ அதிகாரியின் கணவர் வீடு தாக்கப்பட்டதாக பொய் தகவலை பரப்பியவர் மீது வழக்குப்பதிவு



பெலகாவி, மே.17

பாகிஸ்தான் அடாவடிக்கு இந்திய ராணுவம் பதிலடி கொடுத்தது பற்றியும், பாகிஸ்தானுக்கு எதிரான சண்டையில் இந்தியாவின் வெற்றி குறித்தும் ராணுவ அதிகாரி கர்னல் சோபியா குரேஷி செய்தியாளர்களிடம் தெரிவித்து வந்தார். இதன் மூலம் அவர் இந்தியா மட்டுமின்றி உலக அளவில் பிரபலமானார்.

இவரது கணவர் தாஜூதீனும் ராணுவ அதிகாரி ஆவார். அவரது சொந்த ஊர் பெலகாவி மாவட்டம் கோகாக் தாலுகா கொத்தனூர் ஆகும். தாஜூதீனின் தாய், தந்தை கொத்தனூரில் தான் வசிக்கின்றனர். இந்த நிலையில், கர்னல் ஷோபியா குரேஷியின் கணவர் வீடு தாக்கப்பட்டு உள்ளதாகவும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் தான் இந்த தாக்குதலை நடத்தி இருப்பதாகவும் அனீஸ் உதீன் என்பவர் எக்ஸ் வலைதளத்தில் பதிவு மற்றும் புகைப்படம் வெளியிட்டு இருந்தார்.

இதனை பெலகாவி போலீஸ் சூப்பிரண்டு பீமா சங்கர் குலேத் மறுத்திருந்தார். இந்த நிலையில், சமூக வலைதளத்தில் பொய் தகவல்களை வெளியிட்டதாக அனீஸ் உதீன் மீது பெலகாவி சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் வழக்குப்பதிவாகி உள்ளது. அனீஸ் உதீனை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அவர் இந்தியாவில் இருந்தால் கண்டிப்பாக கைது செய்வோம் என்றும், ஆனால் அவர் வெளிநாடுகளில் இருந்தால் எந்த நடவடிக்கையும் எடுக்க வாய்ப்பில்லை என்றும் போலீஸ் சூப்பிரண்டு பீமா சங்கர் குலேத் தெரிவித்துள்ளார்.


## திருநெல்வேலி பேரிடர் மீட்பு குழுவினரின் உபகரணங்களை மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் ஆய்வு



திருநெல்வேலி, மே.17

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் மாவட்ட ஆயுதப்படையில் வைத்து பேரிடர் மீட்பு குழுவினரின் உபகரணங்களை ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது தென்மேற்கு பருவமழை காலங்களில் மீட்பு குழுவினர் 24 மணி நேரமும் தொடர் கண்காணிப்பில் ஈடுபட வேண்டும். மேலும் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாத வண்ணம் விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டு பொதுமக்களின் உயிரையும் உடைமைகளையும் காப்பதில் முக்கியத்துவம் கொடுத்து செயலாற்ற வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார். இந்த நிகழ்வின் போது திருநெல்வேலி ஆயுதப்படை டி.எஸ்.பி. சுப்பிரமணியன் மற்றும் மாவட்ட ஆயுதப்படை போலீஸ் இன்ஸ்பெக்டர் பேச்சிமுத்து, சப் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் காவலர்கள் உடன் இருந்தனர்.

## தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் தலைமையில் வல்லநாடு பகுதியில் அனைத்து சமுதாய நல்லிணக்க கூட்டம்



தூத்துக்குடி, மே.17

தூத்துக்குடி மாவட்டம், முறப்பநாடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வல்லநாடு பகுதியில் உள்ள தனியார் மஹாலில்வைத்துநேற்று(15.5.2025) மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் தலைமையில் அனைத்து சமுதாய நல்லிணக்க கூட்டம் நடைபெற்றது. இதில் வல்லநாடு, கீழவல்லநாடு, வடவல்லநாடு சென்னல்பட்டி, வசவப்பபுரம், பக்கப்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அனைத்து சமுதாய இளைஞர்கள், ஊர் முக்கியஸ்தர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பேசியபோது, "உங்கள் கிராம பகுதியை சேர்ந்த குழந்தைகள் கல்வியை நன்றாக கற்றும், இளைஞர்கள் எவ்வித பிரச்சினையில் ஈடுபடாமலும், அரசு பணிகளிலும் மற்றும் இதர தனியார் நிறுவனங்களிலும் சேர உழைக்க வேண்டும்.

உங்கள் பகுதிகளில் எந்தவித ஜாதி சண்டைகளும் ஏற்படா வண்ணம் அனைத்து சமுதாய மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். கிராமத்தில் வசிப்பவர்களுக்கிடையே ஏற்படும் தங்களின் தனிப்பட்ட பிரச்சினையை பொது பிரச்சினையாக்காமல் காவல் நிலையத்தின் மூலம் சுமுகமாக தீர்ப்பதற்கு வழி காண வேண்டும்.

கிராம இளைஞர்கள் சாதி சமுதாய வேறுபாடின்றி அனைத்து சமுதாய மக்களுடன் ஒற்றுமையாக பழகி வழிகாட்ட வேண்டும். அந்நிய நபர்கள் யாரேனும் தங்கள் கிராம பகுதிகளில் சுற்றித் திரிந்தாலோ அல்லது அந்நிய நபர்களின் நடமாட்டம் இருப்பது தெரிந்தாலோ முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எந்தவித குற்றசம்பவம் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

தங்கள் பகுதியில் உள்ள முக்கியஸ்தர்கள், கிராம பகுதிகளில் சாதி சண்டைகள் நடைபெறாமல் இருக்கும் பொருட்டு, அதனால் சந்திக்கும் இழப்புகளையும், பொருளாதார இழப்புகளையும் மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுவதையும் அவர்களுக்கு எடுத்துக் கூறி சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்.

கிராமங்களில் நடக்கும் திருவிழா நிகழ்ச்சிகளில் மற்ற சமுதாய மக்களை பாதிக்கும் வகையில் பாடல்கள், கொடிகள் மற்றும் சுவரொட்டி வாசகங்கள் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கிராமத்தில் ஏதேனும் சிறு பிரச்சினைகள் ஏற்படும்போது சமுதாய மக்களை ஒன்று திரட்டி சாலை மறியல், ஆர்ப்பாட்டம், போராட்டம் போன்ற செயல்களில் ஈடுபடாமல் உடனடியாககாவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும். காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் உங்கள் பிரச்சினையை நிவர்த்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள். மேலும் கிராமத்தில் நடைபெறும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் குறித்து (மதுபானம், கஞ்சா விற்பனை செய்பவர்கள்) காவல்துறைக்கு தகவல் தெரிவித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வழி செய்ய வேண்டும். தகவல் தருபவர்களின் விபரங்கள் ரகசியமாக வைக்கப்படும்.

கிராமத்தில் வசிக்கும் அனைத்து சமுதாய மக்களும் சாதி மத சண்டைகள் இன்றி, சமுதாய ஏற்றத் தாழ்வுகள் இன்றியும், குற்றமில்லாத கிராமமாகவும் உங்கள் கிராமம் முன்னணி கிராமமாகவும் திகழ ஒற்றுமையாக இருக்க வேண்டும்" என்று கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இக்கூட்டத்தில் தூத்துக்குடி ஊரக உட்கோட்ட டி.எஸ்.பி. சுதீர், முறப்பநாடு போலீஸ் இன்ஸ்பெக்டர் சேக் அப்துல்காதர் உட்பட காவல்துறையினர் மற்றும் அனைத்து கிராம இளைஞர்கள், ஊர் முக்கியஸ்தர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தினகனி




# சூலூர் விமானப்படை தளத்திற்குள் அத்துமீறி நுழைந்த வடமாநில வாலிபரால் பரபரப்பு

கோவை, மே.17

கோவை மாவட்டம் சூலூரில் விமானப்படை தளம் உள்ளது. இங்கு தேஜாஸ் போர் விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

இந்த விமானப்படை தளத்தை சுற்றி சுவர் கட்டப்பட்டு, ஏராளமான இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளது. மேலும் 24 மணி நேரமும் 2 அடுக்கு பாதுகாப்பு உள்ளது.

இந்த நிலையில் விமானப்படைதளத்தின் சுற்றுச்சுவரை தாண்டி நேற்றுமுன் தினம் 30 வயது மதிக்கத்தக்க மர்ம நபர் உள்ளே புகுந்தார். இதை கவனித்த வீரர்கள் அந்த நபரை மடக்கி பிடித்தனர். விமானப்படை அதிகாரிகள் அவரிடம் விசாரணை நடத்தினர். அப்போது அவர், தனது பெயர் சந்தீப் என்றும், சண்டிகரை சேர்ந்தவன் என்று கூறியதுடன், முன்னுக்கு பின் முரணாக



பேசினார்.

இதனால் அந்த வாலிபரை விமானப்படை அதிகாரிகள், சூலூர் போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். போலீசார் அந்த வாலிபரிடம் விசாரணை நடத்தினர்.

இதில் அந்த நபருக்கு மனநலம் பாதிக்கப் பட்டு இருக்கலாம் என்பது தெரியவந்துள்ளது. எனவே போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்வு முடிவு வெளியீடு: தோல்வி பயத்தால் பிளஸ்1 மாணவர் தற்கொலை



திருப்பூர், மே.17

தேனி மாவட்டத்தை சேர்ந்தவர் கண்ணன். இவரது மனைவி பிரியா. இவர்கள் குடும்பத்துடன் திருப்பூர் சூசையாபுரம் பகுதியில் வாடகை வீட்டில் தங்கி பனியன் நிறுவனத்தில் டெய்லராக வேலை பார்த்து வருகின்றனர். இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர்.

முதல் மகன் கல்லூரியில் படிக்கிறார். 2வது மகன் பாலகணேஷ் (16) பிளஸ்1 தேர்வு எழுதி இருந்தார். தற்போது கோடை விடுமுறை என்பதால் அவர், தேனியில் உள்ள பாட்டி வீட்டிற்கு சென்றிருந்தார்.

பிளஸ்1 தேர்வு முடிவுகள் வெளியாவதால் பாலகணேசை அவரது பெற்றோர் திருப்பூர் வருமாறு அழைத்தனர். இதையடுத்து பாலகணேஷ் தேனியில் இருந்து நேற்று திருப்பூர் வந்தார்.

அப்போது அவரது பெற்றோர் பனியன் நிறுவனத்திற்கு வேலைக்கு சென்றுஇருந்தனர். வேலை முடிந்ததும் அவர்கள் வீட்டிற்கு வந்தபோது வீட்டின் கதவு திறந்து கிடந்தது. அவர்கள் உள்ளே சென்று பார்த்தபோது பாலகணேஷ் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார். இதை கண்டு அதிர்ச்சி அடைந்த அவர்கள், பாலகணேசை மீட்டு திருப்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

அங்கு மாணவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து திருப்பூர் வடக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். பிளஸ்1 தேர்வு முடிவுகள் வெளியாகும் நிலையில் தோல்வி பயத்தில் மாணவர் தற்கொலை செய்து கொண்டதாக போலீசார் தெரிவித்தனர். தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, மே.17

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக் கழகத்திற்கு இரவு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

மின் அஞ்சல் மூலம் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மின் அஞ்சல் குறித்து போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் மோப்ப நாய் உதவியுடன் பல்கலைக்கழகத்தில் சோதனை நடத்தினர்.

சோதனையின் முடிவில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரியவந்தது.

இதையடுத்து, இந்த சம்பவம் தொடர்பாக கோட்டூர்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


அண்ணா பல்கலைக்கழகத்திற்கு இதுவரை மொத்தம் 17 முறை வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வீடு உள்ளிட்ட வரிகள் உயர்வு இல்லை அமைச்சர் கே.என்.நேரு பேட்டி

திருவாரூர், மே.17

திருவாரூரில் நேற்று நடந்த மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்றார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றி பெறுவது குறித்து கட்சி நிர்வாகிகளுடன் கலந்தாலோசனை நடத்தினோம் என்றார்.

நகராட்சியில் தொழில் உள்ளிட்ட வரிகள் உயர்த்தப்படுமா? என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் கே.என்.நேரு, ஏற்கனவே சட்டசபையில்



ஒவ்வொரு ஆண்டும் 6 சதவீதம் வரி உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் வரி உயர்வு கூடாது. ஏற்கனவே இருந்த வரிகளை மட்டுமே வாங்க வேண்டும் என முதல்அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே குப்பை வரி கிடையாது, வீடு உள்ளிட்ட வரிகள் உயர்வு இல்லை.


இதுகுறித்து உரிய முறையில் அரசாணை வெளியிடப்படும் என்றார்.

# ராமேசுவரம் அருகே கடல் பகுதியில் பறந்த மர்ம டிரோன் உளவு பிரிவு போலீசார் விசாரணை

ராமநாதபுரம் மே.17

ராமேசுவரத்தில் மிக அருகாமையில் இலங்கை கடல் பகுதி உள்ளதால் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக காணப்படுகிறது. மேலும், ராமேசுவரம், தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு அவ்வப்போது கடல் அட்டை, பீடி இலை, மஞ்சள், ஏலக்காய் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கடத்தி செல்லப்படுகின்றன. அதேபோல் இலங்கையில் இருந்தும் கடத்தல்காரர்கள் மூலம் தங்கக்கட்டிகள் தமிழகத்திற்கு கடத்தி கொண்டுவரப்படுகின்றன.

இந்நிலையில் ராமேசுவரம் அருகே உள்ள இந்திய கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் நேற்று மர்ம டிரோன் பறந்து சென்றதாக கடற்படையின் ரேடாரில் பதிவாகி உள்ளது. இதை தொடர்ந்து இந்திய கடற்படை மற்றும் ராமேசுவரத்தில் உள்ள மத்திய, மாநில உளவு பிரிவு போலீசார் ராமேசுவரம் அருகே இந்திய கடல் எல்லை பகுதியில் பறந்து சென்ற டிரோன் எந்த பகுதியில் இருந்து வந்தது? யார் மூலம் பறக்க விடப்பட்டது? என்பது குறித்து தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.



இதற்கிடையே ராமேசுவரம் கடல் பகுதியில் நேற்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மூலம் சுற்றுலாத்துறை குறித்த தகவலுக்காக டிரோன் கேமரா பறக்க விடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனவே, சுற்றுலா வளர்ச்சித்துறை அதிகாரிகளிடமும் உளவு பிரிவு போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# திருவிழாவில் கலந்து கொண்டோருக்கு திடீர் உடல் உபாதைகள் மருத்துவமனையில் அனுமதி



வல்லநாடு, மே.17

தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு பகுதியில், திருவிழாவில் கலந்து கொண்ட 25க்கும் மேற்பட்டோருக்கு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து அவர்கள் அனைவரும் நெல்லை மாநகர பகுதிகளில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த சம்பவம் அங்கிருந்த குடிநீரால் ஏற்பட்ட பிரச்சனையா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்பது குறித்து டாக்டர்கள் பரிசோதனை செய்து வருகின்றனர்.

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு

தர்மபுரி, மே.17

தமிழககர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது. மேலும் கர்நாடகா காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், தமிழக எல்லையோர காவிரி ஆற்று பகுதிகளிலும் பெய்த மழையின் அளவு குறைந்தது.

இதனால் தமிழக கர்நாடக எல்லை பகுதியான பிலிகுண்டுலுவில் நீர்வரத்து நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. இதனால் மெயின் அருவி, ஐந்தருவி, சினி பால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீரின் வேகம் குறைந்தது.



இந்த நிலையில் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 700 கன அடியில் இருந்து 5 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. தமிழக காவிரி நீர் படிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதன் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து உயர்ந்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகளும், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# பஞ்சமி நிலங்களை தகுதியானவர்களுக்கு வழங்க நடவடிக்கை மதுரை ஐகோர்ட்டு உத்தரவு



மதுரை மே.17

தென்காசி மாவட்டம் புளியரை பகவதிபுரத்தை சேர்ந்த கென்சி என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "எங்கள் பகுதியில் ஏராளமான பஞ்சமி நிலங்கள் உள்ளன. அவை ஆதிதிராவிடர் சமுதாயத்தை சேர்ந்த நிலம் இல்லாத ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டியவை. ஆனால் இந்த நிலங்களை செல்வாக்கு மிக்க நபர்கள் ஆக்கிரமித்து உள்ளனர். இதனால் என்னை போல வீடு, நிலம் இல்லாதவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறோம்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் அனுப்பியும் எந்த பலனும் இல்லை. எனவே உரிய நடவடிக்கை எடுத்து பஞ்சமி நிலங்களை மீட்டு ஆதிதிராவிடர் சமுதாயத்தை சேர்ந்த ஏழைகளுக்கு பிரித்து வழங்கும்படி உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி பாலாஜி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, மனுதாரரின் மனுவை செங்கோட்டை தாசில்தார் உள்ளிட்ட அதிகாரிகள் 8 வாரத்தில் பரிசீலித்து பஞ்சமி நிலங்களை தகுதி அடிப்படையில் உரிய நபர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

# ஊஞ்சலில் விளையாடியபோது சேலை இறுக்கி பள்ளி மாணவி உயிரிழப்பு

திருவண்ணாமலை மே.17

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த ராட்டினமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட ஈ.பி.நகர் பகுதியைச் சேர்ந்தவர் முருகன். இவரது மனைவி ரேகா. இவர்களது மகள் பாக்கியா (11 வயது), ஆரணியில் உள்ள அரசு நிதி உதவி பெறும் பள்ளியில் 6ம் வகுப்பு படித்து வந்தார்.

வீட்டில் சேலை கட்டி ஊஞ்சல் விளையாடினாள். அப்போது அவரது கழுத்தில் சேலை இறுக்கி மூச்சு திணறி மயங்கினாள். இதனையடுத்து அவரை சிகிச்சைக்காக ஆரணி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்ததில் சிறுமி ஏற்கனவே இறந்துவிட்டது தெரியவந்தது.

இதுகுறித்த புகாரின் பேரில் ஆரணி தாலுகா போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். ஊஞ்சலில் விளையாடிய சிறுமி சேலை இறுக்கி உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பிறந்தநாள் விழாவில் பிரியாணி சாப்பிட்ட விவசாயி உயிரிழப்பு.. பலர் மருத்துவமனையில் அனுமதி



புதுக்கோட்டை மே.17

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஒன்றியம், ஏம்பல் அருகே ஒரு வயது குழந்தைக்கு பிறந்தநாள் விழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. விழாவில் 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு சைவ, அசைவ உணவு வழங்கப்பட்டது.

இதில் பிரியாணி சாப்பிட்டவர்களுக்கு உடல் உபாதை ஏற்பட்டது. இதையடுத்து சிலர் அருகில் உள்ள மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று வீடு திரும்பினர்.

இதில் சிகிச்சைக்கு செல்லாமல் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த வேளாணி பகுதியை சேர்ந்த விவசாயி கருப்பையா (70) என்பவர் திடீரென பரிதாபமாக இறந்தார்.

முன்னதாக விழாவில் கலந்து கொண்டு அசைவ உணவு சாப்பிட்ட 50க்கும் மேற்பட்டோர் ஏம்பல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், காரைக்குடி தனியார் மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர்.

இச்சம்பவம் குறித்து சுகாதாரத் துறையினர், உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில், உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் உணவுகளை ஆய்வுக்காக மாதிரி எடுக்க பிறந்தநாள்நடைபெற்றவீட்டிற்கு சென்றனர். ஆனால் உணவு தயாரிக்கப்பட்டு மறுநாள் ஆனதால் அது அனைத்தும் கெட்டுப் போய்விட்டது. இதையடுத்து பிறந்த நாளுக்கு வெட்டப்பட்ட கேக்கை மட்டும் பரிசோதனைக்காக அவர்கள் எடுத்துச் சென்றனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

# வெளியாகும் தேர்வு முடிவுகள்.. தோல்வி பயத்தால் 10ம் வகுப்பு மாணவி எடுத்த விபரீத முடிவு



நாமக்கல் மே.17

நாமக்கல் மாவட்டம் நல்லாக்கவுண்டம்பாளையத்தை சேர்ந்தவர் கவிதா (வயது 40). இவர் சாணார்பாளையத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் பணிபுரிந்து வருகிறார். இவரது மகள் பிலிக்கல்பாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார்.

மேலும் மாணவி 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி உள்ளார். இன்று (வெள்ளிக்கிழமை) 10ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாக உள்ளது. இந்நிலையில் தேர்வில் குறைந்த மதிப்பெண் மட்டுமே கிடைக்கும் எனவும், மேலும் பொதுத்தேர்வில் தோல்வி அடைந்து விடுவோம் என்ற பயத்திலும் மாணவி இருந்துள்ளார்.

இந்தநிலையில், நேற்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் மின் விசிறியில் துப்பட்டாவால் மாணவி திடீரென தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# 2026சட்டமன்ற தேர்தலில்.. காங்கிரஸ் 41 இடங்களில் போட்டியிட வேண்டும் எம்.எல்.ஏ.க்கள் வலியுறுத்தல்

சென்னை, மே.17

தமிழ்நாடு காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் 4 நாட்கள் பயணமாக தமிழகம் வந்துள்ளார். சென்னை சத்தியமூர்த்தி பவனில், நேற்று தமிழ்நாடு காங்கிரஸ் கிராம கமிட்டிகளை அமைப்பது குறித்து கட்சி நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்துள்ளார்.

மேலும், எம்.எல்.ஏ.க்கள், அணி நிர்வாகிகள், கட்சி மாநில நிர்வாகிகளிடம் தனித்தனியாக ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டங்களில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் ராஜேஷ்குமார், தேசிய செயலாளர் சூரஜ் ஹெக்டே, கிராம நிர்வாக கமிட்டி ஒருங்கிணைப்பாளர் பீட்டர் அல்போன்ஸ், அசன் மவுலானா, ராதாகிருஷ்ணன், மாங்குடி உள்ளிட்ட எம்.எல்.ஏ.க்கள், எஸ்.சி.துறை மாநில தலைவர் உள்பட பலர் கலந்து கொண்டனர். எம்.எல்.ஏ.க்கள் ஆலோசனை கூட்டத்தில் சிலர், 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்பதற்கும், கூடுதல் எண்ணிக்கையில் இடம் கேட்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. குறைந்தபட்சம் 2016ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் நாம் போட்டியிட்ட 41 இடங்களிலாவது கண்டிப்பாக போட்டியிட வேண்டும்" என்றும் வலியுறுத்தி உள்ளனர். அதேபோன்று, அணித் தலைவர்கள் கூட்டத்தில் பேசிய சிலர் 2026சட்டமன்ற தேர்தலில் கூடுதல் இடங்களை கேட்டுப் பெறுவதுடன், ஏற்கனவே எம்.எல்.ஏ.வாக இருப்பவர்களுக்கு மட்டும் இடம் கொடுக்காமல் புதியவர்களுக்கும் எம்.எல்.ஏ. சீட் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவையில் அதிர்ச்சி சம்பவம்.. மாணவரை கொன்றுவிட்டு பிணத்துடன் தூங்கிய கொலையாளிகள்

கோயம்புத்தூர், மே.17

கோவை வெள்ளலூரில் நடந்த கல்லூரி மாணவர் கொலையில் காதலியை தட்டி பறித்த ஆத்திரத்தில் போதை ஊசி செலுத்தி கொன்றதாக கைதானவர்கள் பரபரப்பு வாக்குமூலம் அளித்து உள்ளனர்.

முன்னதாக வெள்ளலூர் குப்பைக்கிடங்கு அருகே ஒருங்கிணைந்த பஸ் நிலையத்துக்காக கட்டப்பட்ட கட்டிடத்தில் கடந்த 11ந் தேதி கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் வாலிபர் பிணம் கிடந்தது. அதை கைப்பற்றிய போத்தனூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

அதில் உயிரிழந்தவர் மதுரை அவனியாபுரத்தை சேர்ந்த சூர்யா (வயது 21) என்பதும், கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் படித்து வந்ததும் தெரியவந்தது. அவர் தனது நண்பர் கார்த்திக்கின் (21) காதலியுடன் பேசி, அவர்களது காதலை முறித்து உள்ளார். அத்துடன் அந்த பெண்ணும், சூர்யாவும் காதலித்து உள்ளனர்.

இதை அறிந்த கார்த்திக், தனது நண்பர்களான மாதேஷ் (21), முகமது ரபி (21), நரேன் கார்த்திக் (21) ஆகியோருடன் சேர்ந்து சூர்யாவை கொலை செய்து உடலை சம்பவ இடத்தில் வீசிச்சென்றது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அந்த 4 பேரையும் கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்த கொலை சம்பவம் தொடர்பாக போலீசார் கூறுகையில், "கொலை செய்யப்பட்ட சூர்யா, கார்த்திக் ஆகியோர் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள். அவர்கள் கோவையில் உள்ள கல்லூரியில் ஒன்றாக படித்தனர். பின்னர் சென்னையில் வேறு கல்லூரியில் படிக்க சூர்யா சென்றுவிட்டார்.



ஆனால் அவர் கார்த்திக் காதலித்து வந்த பெண்ணின்செல்போன்எண்ணை அறிந்து அவரிடம் நன்றாக பேசி, காதலை பிரித்துவிட்டார். பின்னர் சூர்யாவும் அந்த பெண்ணும் காதலித்து வந்தனர். இதை அறிந்த கார்த்திக் ஆத்திரம் அடைந்தார். எனவே அவரை கொலை செய்ய முடிவு செய்தார்.

இதற்காக கடந்த 8ந் தேதி சூர்யாவை கோவைக்கு அழைத்தார். அதன்படி கோவை வந்த அவர் போத்தனூர் போஸ்டல் காலனியில் உள்ள கார்த்திக் வீட்டுக்கு சென்றார். அங்கு கார்த்திக்கின் நண்பர்களான மாதேஷ், முகமது ரபி, நரேன் கார்த்திக் ஆகியோர் இருந்தனர்.

பின்னர் 4 பேரும் சேர்ந்து சூர்யாவுக்கு அளவுக்கு அதிகமாக மதுவை குடிக்க கொடுத்தனர். அப்போது அவருக்கு போதை ஊசியையும் போட்டனர். அதில் மயங்கிய அவரை கை, கால்களை கட்டி தலையணையால் முகத்தை அமுக்கி கொலை செய்தனர்.

இதற்கிடையில் 4 பேரும் குடிபோதையில் இருந்ததால் சூர்யாவின் பிணத்தை எப்படி அகற்றுவது என்பது தெரியாமல் இருந்தனர். பின்னர் பிணத்துடன் அங்கேயே படுத்து உறங்கினர். அதிகாலையில் எழுந்ததும், ஒரு காரில் பிணத்தை ஏற்றி சம்பவ இடத்தில் வீசிவிட்டு தப்பி சென்றனர்" என்று தெரிவித்தனர்.

கைதான 4 பேரும் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

## முசிறி அருகே ஏரியில் மீன்பிடி திருவிழா: கிராம மக்கள் குவிந்தனர்



திருச்சி மே.17

திருச்சி மாவட்டம் முசிறி தாலுகா திருத்தலையூர் கிராமத்தில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் பாசன ஏரி அமைந்துள்ளது. மழை காலங்களில் இந்த ஏரிக்கு வரும் தண்ணீரால் இப்பகுதியில் சுற்றியுள்ள விவசாய நிலங்கள் பாசனம் பெறும்.

தற்போது இந்த ஏரியில் தண்ணீர் குறைவாக உள்ள நிலையில் ஏரியில் கிராம மக்கள் மீன் பிடி திருவிழா நடத்திட முடிவு செய்தனர். இதையடுத்து நேற்று திருத்தலையூர், மேலகொட்டம், பேரூர், கண்ணனூர், பாளையம், ஜெம்புநாதபுரம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து திரளான பொதுமக்கள் காலை முதலே மீன்பிடி வலைகளுடன் அங்கு குவிந்தனர்.

பின்னர் பொதுமக்கள் ஆரவாரத்துடன் ஏரியில் இறங்கி மீன்பிடித்தனர். கத்தா, சுருக்கு வலை, அரிவலை, கொசு வலை ஆகியவற்றின் உதவியோடு பொதுமக்கள் மீன்களை பிடித்தனர். இது குறித்து பொதுமக்கள் கூறியதாவது:

தற்போது கடலில் மீன் பிடி தடைக்காலம் அறிவித்துள்ள நிலையில் விற்பனைக்கு மீன்களின் வரத்து குறைவாக உள்ளதுடன் விலையும் அதிகமாக உள்ளது. இந்நிலையில் திருத்தலையூர் ஏரியில் மீன் பிடி திருவிழா நடத்தியதால் சாதி, மத பேதமின்றி அனைவரும் ஒன்று சேர்ந்து ஏரியில் மீன் பிடித்தது மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது.

எங்கள் வலையில் கெண்டை, கெளுத்தி, சர்க்கார், விரால், சங்கரா உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்கள் சிக்கின. வருடந்தோறும் நடைபெறும் மீன்பிடி திருவிழாவில் இந்த வருடம் கடந்த ஆண்டை விட அதிகமாகவே மீன்கள் கிடைத்தன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ஓட்டுநர் பயிற்சி கார், லாரி மீது மோதி விபத்து: ஒருவர் உயிரிழப்பு...4 பேர் படுகாயம்



சென்னை, மே.17

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த கிரிசமுத்திரம் பகுதி பெங்களூர் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஓட்டுநர் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கார் வேகமாக சென்று திரும்பிய போது பின்னால் சிமெண்ட் லோடு ஏற்றி வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் காரில் ஓட்டுநர் பயிற்சி ஈடுபட்டிருந்த 5 பெண்கள் படுகாயங்களுடன் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதில் வாணியம்பாடி நீலிக்கொல்லி பகுதியை சேர்ந்த நாபியா ஷபாகத் (வயது 38) என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். விபத்து தொடர்பாக காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேமுதிக 2.0 தொடங்குகிறது விஜயபிரபாகரன் பேச்சு



சென்னை மே.17

விஜயகாந்தின் இளைய மகனான சண்முக பாண்டியன், படைத்தலைவன் என்ற திரைப்படத்தின் நடித்துள்ளார். இப்படத்தை இயக்குனர் அன்பு இயக்கியுள்ளார். இளையராஜா இப்படத்துக்கு இசை அமைத்துள்ளார்.

இந்நிலையில் இப்படத்தின் இசை வெளியீட்டு விழா இன்று நடைபெற்றது. இதில் சண்முக பாண்டியனின் சகோதரரும், தேமுதிக இளைஞர் அணி செயலாளருமான விஜய பிரபாகரன் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர் கூறியதாவது;

"தேமுதிக 2.0 தொடங்குகிறது. கேப்டன் விட்டுச் சென்ற பணிகளை நாங்கள் செய்வோம். அது சினிமாவாக இருந்தாலும் சரி அரசியலாக இருந்தாலும் சரி. விஜயகாந்தை போல சண்முக பாண்டியனும் உங்கள் சொத்துதான். நான் தான் அப்பாவுக்கு முதல் ரசிகன்.

இப்போது சண்முக பாண்டியனுக்கும் நானே முதல் ரசிகன்" என்று தெரிவித்தார்.

## குற்றம்சாட்டப்பட்டவர்கள் வழுக்கி விழும் நிலையில் காவல் நிலைய கழிவறைகள் மட்டும் உள்ளதா? ஐகோர்ட் கேள்வி



சென்னை, மே.17

சில குற்றவாளிகள் போலீசாரிடன் இருந்து தப்பிக்க முயன்றபோது கீழே விழுந்து கால் உடைவதும், சில சமயங்களில் கைது செய்த பின்னர் சில குற்றவாளிகள் காவல் நிலையத்தில் உள்ள கழிப்பறையில் வழுக்கி விழுந்து கை உடைவதும் சில காலங்களாக நடைபெற்றுவருகிறது.

இதேபோல் வழக்கு ஒன்றில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நபரின் தந்தை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த நிலையில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் வழுக்கி விழும் நிலையில் தமிழக காவல் நிலைய கழிவறைகள் மட்டும் உள்ளதா? என்று ஐகோர்ட் கேள்வி எழுப்பி உள்ளது. கைதானவர்கள் வழுக்கி விழுந்து கட்டுப்போடும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் கைதானவர்கள் வழுக்கி விழுந்தால் சம்பந்தப்பட்ட காவலர்கள் பணியை இழக்கும் நிலை ஏற்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

## சென்னை: கூடுதல் பணம் வசூலித்த இனிப்பகத்திற்கு கோர்ட்டு நூதன தீர்ப்பு



சென்னை, மே.17

சென்னை புரசைவாக்கத்தில் உள்ள பிரபல இனிப்பகத்துக்கு எதிராக ரவிசங்கர் என்பவர் நுகர்வோர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். அவர், கால் கிலோ பாதாம் பிஸ்தா ரோல் வாங்கியுள்ளார். இதற்கு ரூ.425 பணம் பெறுவதற்கு பதிலாக ரூ.450 வசூலித்துள்ளனர் என இனிப்பகம் மீது மனுவில் புகார் அளித்தார்.

இனிப்புக்கு கூடுதலாக ரூ.25 வசூலித்ததில் மன உளைச்சலுக்கு ஆளானேன் என தெரிவித்த அவர், ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிட்டு உள்ளார்.

இதனை விசாரித்த நுகர்வோர் கோர்ட்டு, மன உளைச்சலுக்கு ஆளான வாடிக்கையாளருக்கு ஒரு கிலோ இனிப்பை வீட்டுக்கு அனுப்பி வைக்கும்படி இனிப்பகத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கூடுதலாக வசூலிக்கப்பட்ட பணம், திருப்பி அளிக்கப்பட்டபோதும், இனிப்பகத்தின் செயல்பாடு, சேவை குறைபாட்டை காட்டுகிறது என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காஞ்சிபுரம் வரதராஜர் கோவில் பிரமோற்சவ விழாவில் வடகலை தென்கலை பிரிவினர் மீண்டும் மோதல்



காஞ்சிபுரம், மே.17

108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றாக விளங்கும் காஞ்சிபுரம் வரதராஜர் கோவிலில் வடகலை மற்றும் தென்கலை ஆகிய இரு பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடையே வேதபாராயணம் மற்றும் ஸ்தோத்திர பாடல்கள் பாடுவதில் நீண்ட காலமாக பிரச்சினை நிலவி வருகிறது.

தற்போது காஞ்சிபுரம் வரதராஜர் கோவில் வைகாசி பிரமோற்சவ விழா வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. கடந்த 12 ந்தேதி வரதராஜ பெருமாள் அம்ச வாகனத்தில் எழுந்தருளி காஞ்சி நகரின் முக்கிய வீதிகளில் உலா வந்தபோது திவ்ய பிரபந்தம் பாடுவது தொடர்பாக வடகலை தென்கலை பிரிவினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், பிரமோற்சவ விழாவில் வடகலை தென்கலை பிரிவினர் இன்று மீண்டும் மோதலில் ஈடுபட்டுள்ளனர். சுவாமி உற்சவத்தில் ஸ்தோத்திரம் பாடுவதில் மோதல் ஏற்பட்டதால், சாமி பல்லாக்கை ரோட்டின் நடுவே நிறுத்தி வைத்து இரு தரப்பினரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அப்பகுதிக்கு வந்த போலீசார், இரு தரப்பினரையும் சமாதானம் செய்ததை அடுத்து சுவாமி பல்லக்கு மீண்டும் புறப்பட்டது.

## கடலூர்: சிப்காட் தொழிற்சாலையில் ரசாயன நீர் டேங்கர் வெடித்து விபத்து



கடலூர், மே.17

கடலூர் சிப்காட் தொழிற்பேட்டையில், பல்வேறு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. கெமிக்கல் நிறுவனத்தில் வேதிமருந்துகள் இறக்கும் பணி நடைபெற்று வந்தது. இந்த நிலையில், சிப்காட் சாயப்பட்டறை தொழிற்சாலையில் 6 லட்சம் லிட்டர் ரசாயன நீர் கொண்ட டேங்கர் திடீரென வெடித்து சிதறியது. இதனால், அருகில் உள்ள வீடுகளுக்குள் ரசாயன நீர் புகுந்தது.

வீடுகளுக்குள் புகுந்த ரசாயன நீரால் கண்எரிச்சல், வாந்தி, மயக்கம் ஏற்பட்டு 20க்கும் மேற்பட்டோர் கடலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ரசாயன நீர் புகுந்ததைக் கண்டித்து கடலூர் சிதம்பரம் சாலையில் மக்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

டேங்கர் வெடித்ததுக்கு காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## ஸ்டெர்லைட் ஆலையை திறக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம்: கனிமொழி எம்.பி.

தென்காசி, மே.17

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் திமுக எம்.பி. கனிமொழி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

"ஸ்டெர்லைட் திறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து தங்களுக்கு மனு வந்திருக்கிறது. ஆனால் நாங்கள் ஆலையை திறக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம். திராவிட முன்னேற்ற கழகம் நாங்கள் எடுத்திருக்கக் கூடிய கொள்கையில் உறுதியாகத் தான் இருக்கிறோம். முதல்அமைச்சர் உறுதியாக இருப்பதைப் போல உறுதியாக இருக்கிறோம்.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், கடந்த நான்கு ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பில் ஏற்றதிலிருந்து தொடர்ந்து நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். தமிழக மக்களை மேம்படுத்துவதற்கு தொழில், வேலை வாய்ப்பு, கல்வி, உள்ளிட்ட அனைத்து வகையிலும் முன்னேற்றத்திற்கு கொண்டு செல்லக்கூடிய முயற்சியில் தமிழகம் முன்னிலை மாநிலமாக வெற்றிகரமாக மாற்றி காட்டி இருக்கிறார்.

அதுவே எங்களுடைய வெற்றியை சட்டமன்றம் நாடாளுமன்றத் தேர்தல்களில் எதிரொலிக்கும். இதை மக்கள் தெளிவாக உணர்ந்து இருக்கிறார்கள்" என்றார்.

## தூத்துக்குடி: சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சார்பில் கடனுதவி கலெக்டர் இளம்பகவத் தகவல்

தூத்துக்குடி மே.17

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சிறுபான்மையினருக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுதலுக்கான செயல்பாடுகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் தனிநபர் கடன், சுய உதவி குழுக்களான சிறு தொழில் கடன், விராசத் (கைவினை கலைஞர்களுக்கான கடன் திட்டம்) மற்றும் கல்விக் கடன் ஆகிய கடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வெவ்வேறு வருமானம் சார்ந்த பயனாளிகளுக்கு கடன் (ம) வட்டி விகிதங்களின் மாறுபட்ட அளவுடன் கூடிய திட்டம் 1ல் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் கிராம/நகர்ப்புறங்களில் ரூ.3 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் திட்டம் 2ல் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் கிராம/நகர்ப்புறங்களில் ரூ.8 லட்சம் வரை ஆண்டு வருமானம் இருக்க வேண்டும்.

திட்டம் 1ன் கீழ் தனிநபர் கடன் ஆண்டிற்கு 6% வட்டி விகிதத்திலும் அதிகபட்சகடனாக ரூ.20 லட்சமும், திட்டம் 2ன் கீழ் ஆண்களுக்கு 8%, பெண்களுக்கு 6% வட்டி விகிதத்திலும் அதிகபட்சமாக ரூ.30 லட்சம் கடன் வழங்கப்படுகிறது. கைவினை கலைஞர்களுக்கு ஆண்களுக்கு 5% பெண்களுக்கு 4% வட்டி விகிதத்தில் அதிகபட்ச கடனாக ரூ.10 லட்சம் கடன் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக் கடன் நபர் ஒருவருக்கு ரூ.1 லட்சம் ஆண்டிற்கு 7% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது.

திட்டம் 2ன் கீழ் ஆண்களுக்கு 10% பெண்களுக்கு 8% வட்டி விகிதத்திலும் நபர் ஒருவருக்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் கடன் வழங்கப்படுகிறது. மேலும் சிறுபான்மை மாணவ மாணவிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை/முதுகலை தொழிற்கல்வி/தொழில்நுட்பக் கல்வி பயில்பவர்களுக்கு அதிகப்பட்சமாக திட்டம் 1ன் கீழ் ரூ.20 லட்சம் வரையில் 3% வட்டி விகிதத்திலும், திட்டம் 2ன் கீழ் மாணவர்களுக்கு 8% மாணவியர்களுக்கு 5% வட்டி விகிதத்திலும் ரூ.30 லட்சம் வரையிலும் கல்விக் கடனுதவி வழங்கப்படுகிறது.

மேலும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின கைவினை கலைஞர்களுக்கு தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு விராசாத் கடன் (கைவினை கலைஞர் கடன் திட்டம்) கைவினை கலைஞர்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் மூலப்பொருட்களான உபகரணங்கள்/கருவிகள்/இயந்திரங்கள் வாங்குவதற்கு இக்கடன் வழங்கப்படுகிறது.



எனவே சிறுபான்மையின மக்கள் இத்திட்டத்தை அதிக அளவில் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இம்மாவட்டத்தில் வசிக்கும் கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள், பார்சியர்கள் மற்றும் ஜெயின் ஆகிய சிறுபான்மையினர் மக்கள் கடன் விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்/மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், மாவட்ட/மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஆகிய அலுவலகங்களில் பெற்று அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தனிநபர் கடன் திட்டம், சுய உதவி குழுக்கடன், விராசத் (கைவினை கலைஞர் கடன் திட்டம்) திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் போது கடன் மனுக்களுடன் சிறுபான்மையினர் மதச்சான்றிதழ், சாதிச் சான்றிதழ், வருமான சான்றிதழ், உணவு பங்கீடு அட்டை அல்லது இருப்பிட சான்றிதழ், ஆதார் அட்டை, திட்ட அறிக்கை, கூட்டுறவு வங்கி கோரும் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கல்வி கடனுக்கு விண்ணப்பிக்கும் போது சிறுபான்மையினர் மதச்சான்றிதழ்/சாதிச் சான்றிதழ்/வருமான சான்றிதழ்/இருப்பிட சான்றிதழ் நகல், குடும்ப அட்டை/வாழ்விட சான்று, ஆதார் நகல், பள்ளி மாற்று சான்றிதழ், உண்மைச் சான்றிதழ் (Bonafide Certificate), கல்விக் கட்டணங்கள் செலுத்திய ரசீது அசல் (Original), மதிப்பெண் சான்றிதழ் நகல் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள் சமர்பிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## லேப்டாப் வெடித்து பயங்கர விபத்து ஒருவர் படுகாயம்

கொடைக்கானல், மே.17

கொடைக்கானல் அருகே வில்பட்டி கிராமத்தில் பேன்சி ஸ்டோரில் சார்ஜ் போட்ட படியே ஜெயவீரன் என்கிற மாற்று திறனாளி பயன்படுத்திக் கொண்டிருந்தார். அப்போது யாரும் எதிர்பாராதவிதமாக திடீரென லேப்டாப் வெடித்தது. இதன் விளைவாக கடையில் வைத்திருந்த ஒரு லிட்டர் பெட்ரோல் கேனில் தீ ஏற்பட்டது.

இதனால் தீயானது மளமளவென எரியத் தொடங்கியது. இந்த விபத்தில் ஜெயவீரன் படுகாயமடைந்தார். இதனைக்கண்ட அக்கம்பக்கத்தினர் ஜெயவீரனை மீட்டு வெளியில் கொண்டு வந்தனர். பின்னர் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த நிலையில் இவருக்கு 40 சதவீதம் கை, கால்களில் தீக்காயம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று தீயை அணைத்தனர். மின்கசிவு காரணமாக லேப்டாப் வெடித்து சிதறியதாக முதல்கட்டவிசாரணையில் தெரியவந்துள்ளது. விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மதுரை சித்திரை திருவிழாவில் சாதிய பாகுபாடு இல்லை: ஐகோர்ட்டு மதுரை கிளை பாராட்டு



மதுரை, மே.17

கரூர் மாவட்டத்தில் சாமி கும்பிடுவதில் பட்டியலின மக்களிடம் பாகுபாடு காட்டப்படுவதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு, ஐகோர்ட்டு மதுரை கிளையில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மதுரை சித்திரை திருவிழாவுக்கு ஐகோர்ட்டு மதுரை கிளை பாராட்டு தெரிவித்தது. இதுதொடர்பாக நீதிபதிகள் கருத்து தெரிவித்ததாவது;

"சித்திரை திருவிழாவில் அழகர் மலையிலிருந்து கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வின் வழி நெடுகிலும் அனைத்து மக்களும் அவரை தூக்குகிறார்கள். அதிகமான இடங்களில் அன்னதானம், நீர் மோர் வழங்குகிறார்கள். இதில் எங்குமே சாதிய பாகுபாடு இல்லை. இதேபோல் அனைத்து இடங்களிலும் இருக்கலாமே? மாவட்ட ஆட்சியர் மாறுவேடத்தில் சென்று ஆய்வு செய்திருந்தாலே உண்மையான பிரச்சனை தெரிந்திருக்கும். திருவிழாவில் அனைவருக்கும் ஒரே முறைதான் கடைபிடிக்கப்பட வேண்டும். திருவிழா கொண்டாடுவதே அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்."

இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர்.

## சென்னையில் நாளை வெள்ளநீர் குறித்த பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி



சென்னை, மே.17

செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து மிக அதிக வெள்ளநீர் வெளியேற்றப்படும் பொழுது ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் பொதுமக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைப்பது குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி நாளை மாநகராட்சிக்குட்பட்ட 6 இடங்களில் நடைபெற உள்ளது.

செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து மிக அதிக வெள்ளநீர் வெளியேற்றப்படும் பொழுது ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் பொதுமக்களை எவ்வாறு மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைப்பது என்பது குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி நாளை மாலை 4.00 மணிக்கு கீழ்காணும் இடங்களில் நடைபெற உள்ளது.

1. மாத்தூர் பாலசுப்ரமணி நகர் 2. சடையான்குப்பம் 3. கானுநகர் 4. காசி திரையரங்கம் அருகில் உள்ள பாலம் 5. போரூர் 6. கோட்டூர்புரம் மேற்படி ஒத்திகை நிகழ்வில் வருவாய்த் துறை, நீர்வளத்துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சி உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் சார்பிலும் பங்கேற்பார்கள்.

மேலும், இந்நிகழ்வானது ஒரு ஒத்திகை மட்டுமே. இதுதொடர்பாக பொதுமக்கள் யாரும் அச்சப்பட வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் இந்த ஒத்திகை நிகழ்ச்சியின் போது மக்களின் இயல்பு வாழ்க்கை ஏதும் பாதிக்கப்படாது என வும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து மிக அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் பொதுமக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் 1913 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தங்களது புகார்களைத் தெரிவிக்கலாம் என சென்னை மாநகராட்சி ஆணையர் கேட்டுக் கொண்டார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253



# ஸ்ரீ பக்த வீர ஆஞ்சநேயருக்கு மகா கும்பாபிஷேக திருவிழா



ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாவட்டம், வன்னிவேடு புறவழி சாலை முகப்பில்எழுந்தருளிஅருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பக்தவீர ஆஞ்சநேயர் மகா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பெங்களூர் எம்.எல்.ஆர். சொல்யூஷன் உரிமையாளர் மகாலட்சுமி ரமேஷ் நாராயணப்பா தலைமை தாங்கினார்கள். முன்னதாக யாகசாலைகள் அமைத்து 108 ஓம திரவியங்கள் கொண்டு யாக வேள்வி பூஜை செய்யப்பட்ட புனித கலசநீர் ஸ்ரீ பக்த வீர ஆஞ்சநேயர் மீது ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வன்னிவேடு ஊராட்சி மன்ற தலைவர் கற்பக ராணி சக்திவேல் குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சக்திவேல் குமார், செந்தில் முருகன் டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் எஸ்.எம்.டி.ராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் பக்தர்கள், பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இறுதியில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# 10 ம் வகுப்பு பொதுத் தேர்வில் காரைக்குடி வித்யாகிரி மெட்ரிக் பள்ளியைச் சார்ந்த மாணவர்கள் சாதனை



காரைக்குடி, மே.17

மார்ச் 2025 ல் நடைபெற்ற 10 ம் வகுப்பு பொதுத் தேர்வில் வித்யாகிரி மெட்ரிக் பள்ளியைச் சார்ந்த மாணவன் . பெரியதுரை 494 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பெற்றுள்ளார். இவர் அறிவியல் மற்றும் சமூக அறிவியலில் 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். .கார்த்திகாயினி 487 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடம் பெற்றுள்ளார் .முகமது அர்ஷத் 486 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடம் பெற்றுள்ளார்.

தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்று 100 சதவீதம் வெற்றி பெற்றுள்ளனர். 27 மாணவர்கள் 450 மதிபெண்களுக்கு மேல் பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களை பள்ளி குழுத் தலைவர் கிருஷ்ணன், தாளாளர் . . சுவாமிநாதன், பொருளாளர் ஹாஜி முகமது மீரா, வித்யாகிரி கல்வி நிறுவனங்களின் முதன்மை நிர்வாக அதிகாரி ஐஸ்வர்யா சரண் சுந்தர், வித்யாகிரி பள்ளி முதல்வர் ஹேமமாலினி சுவாமிநாதன், புதுவயல் பள்ளி முதல்வர் . குமார் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் அனைவரும் பாராட்டி வாழ்த்தினர்.

# கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றில் அதிகளவு நீர் வெளியேற்றப்படும் பொழுது பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய மீட்புப்பணிகள் குறித்த ஒத்திகை நிகழ்ச்சி



கரூர், மே.17

கரூர் மாவட்டத்தில் பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய மீட்புப் பணிகள் குறித்த ஒத்திகை நிகழ்ச்சிகள் காவிரி ஆற்றுப்பகுதியான தவிட்டுப் பாளையம், மாயனூர், வாங்கல் மற்றும் குளித்தலை கடம்பர் கோவில் பகுதிகளிலும் அமராவதி ஆற்றில் பசுபதிபாளையம், ஐந்து ரோடு பகுதிகளிலும் நடைபெற்றது.

இந்நிகழ்சியில் பசுபதி பாளையத்தில் நடைபெற்ற ஒத்திகை மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன் தலைமையிலும்,

மாயனூர் கதவனையில் நடைபெற்ற ஒத்திகை குளித்தலை சார் கலெக்டர் தி. சுவாதிரீ, தலைமையிலும், வாங்கலில் நடைபெற்ற ஒத்திகை கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமதுபைசல் தலைமையிலும், குளித்தலையில் நடைபெற்ற ஒத்திகை வட்டாட்சியர் இந்துமதி தலைமையிலும், தவிட்டுப்பாளையத்தில் நடைபெற்ற ஒத்திகை வட்டாட்சியர் தனசேகர் தலைமையிலும் நடைபெற்றது.

இந்த ஒத்திகை நிகழ்ச்சியில், காவிரி ஆற்றில் அதிக அளவு நீர் திறக்கும் பொழுது ஏற்படும் பேரிடர்கள் குறித்தும், பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய ஒத்திகை நிகழ்வுகள் நேரடியாக நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் தண்ணீரில் மூழ்கும் போது எவ்வாறு தங்களை காப்பாற்றிக் கொள்ளலாம், எத்தனை வழிமுறைகளில் தங்களை எளிய முறையில் பாதுகாத்துக் கொள்ளலாம், வீட்டில் உள்ள எளிய பொருட்களை வைத்து எவ்வாறு தங்களை தற்காத்துக் கொள்ளலாம், மீட்கப்பட்ட நபர்க்கு எவ்வாறு முதலுதவி அளிக்கப்பட்டது,

தொடர்ந்து அவரை அவசரகால ஊர்தியில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுதல், வெள்ளப்பெருக்கு அபாயத்தின் போது பொது மக்களை எவ்வாறு வாகனங்கள் மூலம் அதிவேகமாக பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து வெளியேற்றுவது போன்ற நிகழ்வுகள் நேரடியாக ஒத்திகை நிகழ்ச்சியாக செய்து காட்டப்பட்டது என மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், தெரிவித்துள்ளார்கள்.

## தினசரி பலன்கள் (17.5.2025)

1. மேஷம்:

பணியிடம்: அதிர்ஷ்டம் அதிகரிக்கும்; புதிய வாய்ப்புகள் கிடைக்கும். நிதி: நிதி நிலை மேம்படும்; செலவுகளில் கட்டுப்பாடு தேவை. உறவுகள்: குடும்பத்தில் மகிழ்ச்சி; பழைய நண்பர்களுடன் சந்திப்பு.

2. ரிஷபம்:

பணியிடம்: தொழிலில் முன்னேற்றம்; மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். நிதி: பண வரவு அதிகரிக்கும்; முதலீடுகளில் லாபம். உறவுகள்: குடும்பத்தில் ஒற்றுமை; உறவுகளில் நம்பிக்கை அதிகரிக்கும்.

3. மிதுனம்:

பணியிடம்: வேலைப்பளு அதிகரிக்கும்; திட்டமிடல் அவசியம். நிதி: செலவுகள் கட்டுப்படுத்த வேண்டும்; சிக்கனமாக இருக்கவும். உறவுகள்: குடும்ப உறவுகளில் பதட்டம்; பொறுமையாக அணுகவும்.

4. கடகம்

பணியிடம்: தொழிலில் வளர்ச்சி; புதிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன. நிதி: நிதி நிலை மேம்படும்; பழைய கடன்கள் தீரும். உறவுகள்: குடும்பத்தில் மகிழ்ச்சி; நண்பர்களுடன் சந்திப்பு.

5. சிம்மம்

பணியிடம்: புதிய வேலை வாய்ப்புகள்; பதவி உயர்வு சாத்தியம். நிதி: வருமானம் அதிகரிக்கும்; முதலீடுகள் லாபகரமாக இருக்கும். உறவுகள்: குடும்பத்தில் ஒற்றுமை; உறவுகளில் நம்பிக்கை அதிகரிக்கும்.

6. கன்னி

பணியிடம்: தொழிலில் முன்னேற்றம்; புதிய திட்டங்கள் வெற்றி பெறும். நிதி: பண வரவு அதிகரிக்கும்; செலவுகள் கட்டுப்பாட்டில் இருக்கும். உறவுகள்: குடும்பத்தில் மகிழ்ச்சி; உறவுகளில் நம்பிக்கை அதிகரிக்கும்.

7. துலாம் :

பணியிடம்: வேலைப்பளு அதிகரிக்கும்; திட்டமிடல் அவசியம். நிதி: செலவுகள் கட்டுப்படுத்த வேண்டும்; சிக்கனமாக இருக்கவும். உறவுகள்: குடும்ப உறவுகளில் பதட்டம்; பொறுமையாக அணுகவும்.

8. விருச்சிகம்

பணியிடம்: தொழிலில் வளர்ச்சி; புதிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன. நிதி: நிதி நிலை மேம்படும்; பழைய கடன்கள் தீரும். உறவுகள்: குடும்பத்தில் மகிழ்ச்சி; நண்பர்களுடன் சந்திப்பு.

9. தனுசு:

பணியிடம்: புதிய வேலை வாய்ப்புகள்; பதவி உயர்வு சாத்தியம். நிதி: வருமானம் அதிகரிக்கும்; முதலீடுகள் லாபகரமாக இருக்கும். உறவுகள்: குடும்பத்தில் ஒற்றுமை; உறவுகளில் நம்பிக்கை அதிகரிக்கும்.

10. மகரம்

பணியிடம்: தொழிலில் முன்னேற்றம்; புதிய திட்டங்கள் வெற்றி பெறும். நிதி: பண வரவு அதிகரிக்கும்; செலவுகள் கட்டுப்பாட்டில் இருக்கும். உறவுகள்: குடும்பத்தில் மகிழ்ச்சி; உறவுகளில் நம்பிக்கை அதிகரிக்கும்.

11. கும்பம்

பணியிடம்: வேலைப்பளு அதிகரிக்கும்; திட்டமிடல் அவசியம். நிதி: செலவுகள் கட்டுப்படுத்த வேண்டும்; சிக்கனமாக இருக்கவும். உறவுகள்: குடும்ப உறவுகளில் பதட்டம்; பொறுமையாக அணுகவும்.

12. மீனம்

பணியிடம்: தொழிலில் வளர்ச்சி; புதிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன. நிதி: நிதி நிலை மேம்படும்; பழைய கடன்கள் தீரும். உறவுகள்: குடும்பத்தில் மகிழ்ச்சி; நண்பர்களுடன் சந்திப்பு.

# இளையராஜாவின் 'தட்டுவண்டி' பட பர்ஸ்ட் லுக்




1976ம் ஆண்டு வெளியான 'அன்னக்கிளி' படத்தின் மூலம் அறிமுகமானவர் இசைஞானி இளையராஜா. இவர் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், ஆங்கிலம் உட்பட பல்வேறு மொழிகளில் 1,000க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசை அமைத்தும் 10,000க்கு அதிகமான பாடல்களை உருவாக்கியும் உள்ளார்.

சமீபத்தில் லண்டனில் 'வேலியண்ட்' சிம்பொனியை அரங்கேற்றம் செய்து சாதனை படைத்த இளையராஜா தற்போது 'தட்டுவண்டி' என்ற படத்திற்கு இசையமைத்துள்ளார். இப்படத்தை விஜயபாஸ்கர் எழுதி இயக்கி இருக்கிறார். சர்வைவல் பிக்சர்ஸ் சார்பில் ஆர் எம் நானு தயாரிக்கிறார். இந்நிலையில், இப்படத்தின் பர்ட்ஸ் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது. இதனை இளையராஜா வெளியிட்டுள்ளார்.

# "டூரிஸ்ட் பேமிலி" படத்திலிருந்து நீக்கப்பட்ட காட்சி வெளியீடு!





'அயோத்தி, கருடன், நந்தன்' உள்ளிட்ட வெற்றிப்படங்களை அடுத்து சசிகுமார் தற்போது நடித்துள்ள படம் 'டூரிஸ்ட் பேமலி'. குட் நைட், லவ்வர் படங்களை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் இப்படத்தை தயாரித்துள்ளது. அபிஷன் ஜீவிந்த் இயக்கும் இந்தப் படத்தில் சிம்ரன் கதாநாயகியாக நடித்துள்ளார். யோகி பாபு, எம்.எஸ்.பாஸ்கர், மிதுன் ஜெய்சங்கர், கமலேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். கடந்த மே 1ந் தேதி வெளியான இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இலங்கை தமிழர்களான சசிகுமார் குடும்பம் அங்குள்ள பொருளாதார சூழல் காரணமாக தமிழகத்துக்குள் சட்டவிரோதமாக நுழைகின்றனர். அதன்பிறகு அவர்களின் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை நகைச் சுவையுடனும், எமோஷனலுடனும் படம் பதிவு செய்துள்ளது. இப்படம் தமிழ் நாட்டில் மட்டும் ரூ.20 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

சமீபத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் 'டூரிஸ்ட் பேமிலி' படத்தின் இயக்குநர் அபிஜன் ஜீவிந், தயாரிப்பாளர் உள்ளிட்ட படக்குழுவை நேரில் அழைத்துப் பாராட்டினார்.

இப்படம் வெளியான முதல் நாளில் இருந்தே பாசிட்டிவான விமர்சனங்களை பெற்று நாளுக்கு நாள் வசூலையும் வாரி குவித்து வருகிறது. இந்த படத்திற்காக கூடுதல் திரையரங்குகளும் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில், இப்படம் இன்றுடன் மூன்றாவது வாரத்தில் அடி எடுத்து வைத்திருக்கிறது. குடும்பங்கள் கொண்டாடும் இப்படம் இன்றுவரையிலும் பல திரையரங்குகளில் ஹவுஸ்புல்லாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இந்த படத்தில் இருந்து நீக்கப்பட்ட காட்சி ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது. அதாவது அந்த காட்சியில் சசிகுமார் நடித்த சுந்தரபாண்டியன் படத்தில் இடம்பெற்ற 'கொண்டாடும் மனசு விளையாடும் வயசு' பாடலை ரீகிரியேட் செய்திருந்தனர். இது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# நானி நடிக்கும் தி பாரடைஸ் படத்தின் தீம் பாடல் ரிலீஸ்




தசரா படத்தை இயக்கிய ஸ்ரீகாந்த் ஒடேலா நானியின் 33வது படத்தை இயக்குகிறார். 'தி பாரடைஸ்' என பெயர் சூட்டப்பட்டுள்ள இந்தப் படத்தினை எஸ்எல்வி சினிமாஸ் தயாரிக்கிறது. இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார். ஏற்கனவே நானியின் ஜெர்ஸி, கேங்ஸ்டர் படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

சில காலமாகவே இப்படத்தின் கதாநாயகி குறித்து பல வதந்திகள் பரவி வருகின்றன. அதன்படி, சமீபத்திய தகவலின்படி இந்தபடத்தில் 2 கதாநாயகிகள் நடிக்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. அதில் ஒரு கதாநாயகியாக கீர்த்தி ஷெட்டியும் மற்றொரு கதாநாயகியாக கயாடு லோஹரும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

நானியின் படங்களிலேயே அதிக பொருட்செலவில் இந்தப்படம் உருவாகி வருகிறது. இந்த திரைப்படம் 2026 ம் ஆண்டு மார்ச் 26ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் 'தி பாரடைஸ்' படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ வெளியானது. தற்போது, 'தி பாரடைஸ்' தீம் பாடல் வெளியாகி உள்ளது.

# இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள், டி20 தொடர் இந்திய மகளிர் அணி அறிவிப்பு



இந்திய மகளிர் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் அடுத்த மாதம் 28ம் தேதி தொடங்குகிறது. இதில் முதலில் டி20 போட்டிகளும் அதனை தொடர்ந்து ஒருநாள் போட்டிகளும் நடக்கின்றன.

இந்நிலையில், இந்த தொடர்களுக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிகளுக்கு ஹர்மன்ப்ரீத் கவுர் கேப்டனாகவும், ஸ்மிருதி மந்தனா துணை கேப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்திய டி20 அணியில் அதிரடி ஆட்டக்காரரான ஷபாலி வர்மா மீண்டும் இடம் பிடித்துள்ளார்.

இந்திய டி20 அணி விவரம்: ஹர்மன்ப்ரீத் கவுர் (கேப்டன்), ஸ்மிருதி மந்தனா (துணை கேப்டன்), ஷபாலி வர்மா, ஜெமிமா ரோட்ரிக்ஸ், ரிச்சா ஹோஷ் (விக்கெட் கீப்பர்), யாஷ்திகா பாடியா (விக்கெட் கீப்பர்), ஹார்லீஜ் தியோல், தீப்தி சர்மா, ஸ்னே ராணா, ஸ்ரீ சரணி, சுச்சி உபாத்யாய், அமஞ்ஜோத் கவுர், அருந்ததி ரெட்டி, கிராந்தி கவுட், சயாலி சத்காரே.

இந்திய ஒருநாள் அணி விவரம்: ஹர்மன்ப்ரீத் கவுர் (கேப்டன்), ஸ்மிருதி மந்தனா (துணை கேப்டன்), பிரதிகா ராவல், ஹார்லீன் தியோல், ஜெமிமா ரோட்ரிக்ஸ், ரிச்சா ஹோஷ் (விக்கெட் கீப்பர்), யாஷ்திகா பாடியா (விக்கெட் கீப்பர்), தேஜல் ஹஸாப்னிஸ், தீப்தி சர்மா, ஸ்னே ராணா, ஸ்ரீ சரணி, சுச்சி உபாத்யாய், அமஞ்ஜோத் கவுர், அருந்ததி ரெட்டி, கிராந்தி கவுட், சயாலி சத்காரே.

# காயம் காரணமாக விலகிய மயங்க் யாதவ்... மாற்று வீரரை அறிவித்த லக்னோ அணி



இந்தியா பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட போர் பதற்றம் காரணமாக பாதியில் நிறுத்தப்பட்ட 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நாளை மீண்டும் தொடங்குகிறது. நாளை நடக்கும் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் மோதுகின்றன.

போர் பதற்றத்தால் நாட்டில் நிலவிய அசாதாரணமான சூழலால் பதற்றத்திற்கு உள்ளான வெளிநாட்டு வீரர்கள் உடனடியாக தாயகம் திரும்பினர். தற்போது ஐ.பி.எல். போட்டி தொடங்கினாலும் முந்தைய போட்டி அட்டவணையுடன் ஒப்பிடும் போது 9 நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்த மாத கடைசியில் இருந்து மற்ற சர்வதேச கிரிக்கெட் தொடர்கள் தொடங்குகின்றன. தேசிய அணிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டி இருப்பதால் பெரும்பாலான வெளிநாட்டு வீரர்கள் ஐ.பி.எல்.ல் முழுமையாக பங்கேற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், லக்னோ அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மயங்க் யாதவ் காயம் காரணமாக எஞ்சிய ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் வில்லியம் ஓ ரூர்க் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. ரூ. 3 கோடிக்கு அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

# தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன்: உன்னதி ஹூடா, மாள்விகா தோல்வி



தாய்லாந்து ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி பாங்காக்கில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 2வது சுற்றில் தரவரிசையில் 45 வது இடத்தில் உள்ள 17 வயது இந்திய வீராங்கனை உன்னதி ஹூடா, 2ம் நிலை வீராங்கனையான போர்ன்பவீ சோச்சுவோங்குடன் (தாய்லாந்து) மோதினார். இந்த ஆட்டத்தில் உன்னதி ஹூடா 1421, 1121 என்ற நேர்செட்டில் 39 நிமிடங்களில் போர்ன்பவீ சோச்சுவோங்கிடம் தோல்வி கண்டு வெளியேறினார்.

மற்றொரு இந்திய வீராங்கனை மாள்விகா பான்சோத் 1221, 1621 என்ற நேர்செட்டில் முன்னாள் உலக சாம்பியன் ராட்சனோக் இன்டானோனிடம் (தாய்லாந்து) பணிந்தார். இதே போல் ஆகார்ஷி காஷ்யப் 921, 1421 என்ற நேர்செட்டில் தாய்லாந்தின் சுபானிதா காதிதோங்கிடம் தோல்வியை தழுவினார். இதன் மூலம் இந்த போட்டியில் இந்தியாவின் சவால் முடிவுக்கு வந்தது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.